*கவனிக்க.- 2016.08.05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1980 - 2016 අගෝස්තු මස 12 වැනි සිකුරාදා - 2016.08.12**

*1980 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1411 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1417 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1422 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1400 | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.-*** *நிதி முகாமைத்துவம் ( பொறுப்பு) (திருத்தம்) சட்டமூலம் 2016, மே மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2016,செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பி.கே.எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணைகளுக்கான பங்கு பிரிவுகள் விற்பனை - 2017

*2017, சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2017, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் கீழ்க்காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள, கள்ளுத் தவறணைகளில் முத்திரையிடப்பட்டு அடைக்கப்பட்டுள்ள கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான பூரண வரப்பிரசாத விலைக்கு கொள்வனவு செய்வதற்காக 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் மதுவரி ஆணையாளரினால் வெளியிடப்பட்ட கள்ளு விற்பனை செய்வதன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2016, ஆவணி மாதம் 31 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை குருநாகல் பிரதேச செயலாளரினால் கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*கள்ளு பங்குப் பிரிவு விலைகளைக் கொள்வனவு செய்வதற்காக முன்வருவோர் உரிய கேள்விகோரல் படிவங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தை செலுத்தி எந்த பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் உள்ள காசாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும் மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் கள்ளு விற்பனை தொடர்பான சான்றிதழ்களினையும் கடித உறையினுள் இட்டு அதனை முத்திரையிட்டு அதன் இடது மேல் மூலையில் தாம் கோரும் கள்ளுத் தவறணையின் இலக்கத்தினையும் பெயரினையும் தெளிவாக எழுதி அட்டவணையில் காட்டப்பட்டிருக்கும் கடைசி நேரத்துக்கு முன் கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது இந்தப் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் கேள்விகோரல் பெட்டியில் இடுவதன் மூலம் பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்ய முடியும். குறித்த கேள்விகோரல் படிவங்களை சகல பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.*

*கேள்விகோரல் நபர்களினால் கேள்விகோரல் பத்திரம் பூர்த்திசெய்யும் போது, கேள்விப்பத்திரங்களில் செய்யப்படும் எல்லாத் திருத்தங்களும் கேள்வி கோரல் நபர்களின் பூரண கையொப்பம் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*

*கேள்விகோரல் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2016, ஆவணி மாதம் 31 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையிலாகும். எல்லா கேள்வி கோரல் நபர்களும் இந்த தினத்தன்று, குறிப்பிட்ட நேரத்தில் இந்த பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு வருகை தந்திருத்தல் வேண்டும்.*

*எவ்வித காரணமும் முன்னறிவித்தலும் செய்யாமல் கேள்விப்பத்திரம் அல்லது கேள்விப்பத்திரங்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையும் நிராகரிக்கும் உரிமை குருநாகல் பிரதேச செயலாளருக்கு உண்டு.*

*தனியான வரப்பிரசாதத்தை விலைக்கு பெற்றுக்கொண்ட நபர் என அறிவிக்கப்பட்டபின் சிறந்த கேள்விதாரர் என தெரிவுசெய்யப்பட்டதும் அவர் குறித்த திகதி பி. ப. 2.00 மணிக்கு குருநாகல் பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்படும் தொகையினை பாதுகாப்பு பிணை வைப்பாகச் செலுத்தி விற்பனை நிபந்தனைகளில் கையொப்பமிடல் வேண்டும்.*

*2017 ஆம் வருடத்திற்காக தற்போது கள்ளுத் தவறணைகள் உள்ள இடங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு சான்று வழங்கப்பட மாட்டாது. தற்போது கள்ளுத் தவறணைகள் நடாத்திச்செல்லப்படும் கட்டிடம் 2017 ஆம் வருடத்திற்காக கிடைக்காவிடின் அதற்காக, தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிலையத்தின் தகுதி பற்றி கேள்விப்பத்திரம் வழங்கப்பட்ட திகதி தொடக்கம் 30 தினங்களுக்குள் வெற்றிபெற்ற கேள்வியாளரினால் அதற்காக குருநாகல் பிரதேச செயலாளரிடம் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.*

*2016, ஆவணி மாதம் 31 ஆந் திகதி பங்குப் பிரிவுகளின் விரும்பத்தகுந்த கோரல்கள் இல்லாதிருப்பின் 2016.10.28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விலை பங்கு பிரிவுகள் குறித்த இடத்திலேயே நடாத்தப்படும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் குருநாகல் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

ஈ. எம். எம். எச். ஏகநாயக்க,
பிரதேச செயலாளர்,
குருநாகல்.

*பிரதேச செயலாளர் அலுவலகம்,*
*குருநாகல்,*
*2016, யூலை 21.*

*அட்டவணை*

| இலக்கமும் பெயரும் | பற்று (பிரிவு) | தவறணை திறக்கப்பட வேண்டிய பிரதேசம் | கேள்விப்பத்திர வைப்புத் தொகை | கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியும் நேரமும் | தவறணை திறக்கப்பட வேண்டிய நேரம் | தவறணை மூடப்பட வேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|---|
| இலக்கம் 02 குருநாகல் | வேஉடவில்லி ஹந்பத்துவ | நகரப் பிரிவு இல. 1, 9, 10, 11, 12 | 3,000 ரூபா | 2016.08.31 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 |

8-181

---

## பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனை - 2017

1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பின்னைய காலப்பகுதிக்கும் கள்ளுத் தவறணை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் செல்லுபடியாகும் சகல மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கும் செல்லுபடியாகும் பொது மதுபான வரி நிபந்தனைகளுக்கிணங்க 2017 ஆம் ஆண்டுக்குள் மதுபான (கள்ளு) சில்லறை விற்பனைக்கான வரப்பிரசாதங்களை விலைக்கு வாங்குவதற்காக பேருவளை பிரதேச செயலாளராகிய என்னால் 2016ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் நாட்டின் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் தயாரிக்கப்படுவதோடு -

(அ) கேள்விப்பத்திர வைப்புப்பணமாக எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலேனும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய கேள்விப்பத்திர பணம் வைப்புச்செய்து அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டையும் (ரசீத்) ;

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணி, பூமி ஆகிய நிரந்தர சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட கேள்விதாரரின் வருமானம் பற்றிய சான்றிதழ்களையும் முன்வைக்க வேண்டும்.

கேள்விப்பத்திரமும் வருமானச் சான்றிதழும் முன்வைப்பது சம்பந்தமாக மேற்குறிக்கப்பட்ட மதுபான விற்பனைக்கான நிபந்தனைகள் முறையாக பேணப்பட வேண்டுமென்பதை கேள்விப்பத்திரதாரர்களுக்கு ஆணித்தரமாக வலியுறுத்தப்படுகிறது. கேள்விப்பத்திரம் பூர்த்தி செய்யப்படும்போது கேள்விப்பத்திரதாரர் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்:-

(1) கேள்விப்பத்திரம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறு செய்யப்படும்போது அதிலே குறிக்கப்பட்டுள்ள பணத்தினை இலக்கத்திலும் எழுத்திலும் குறிக்கப்படல் வேண்டும்.

(2) பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களில் குறிக்கப்பட்ட சாட்சியாளரின் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) கோடிட்டு வெட்டப்பட்டுச் செய்யப்படும் சகல திருத்தங்களும் கேள்விப்பத்திரதாரரின் குறுகிய கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு பூர்த்தி செய்யப்படாத கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரம் -

(அ) கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்புச் செலுத்தப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டும் (ரசீத்) ;

(ஆ) வருமானச் சான்றிதழோடும், கடித உறையில் இட்டு முத்திரை (சீல்) பதிக்கப்பட வேண்டும். அக்கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் 'மதுபான விற்பனை நிலைய இலக்கமும் பெயரும்' குறிப்பிடப்பட்டு பேருவளை பிரதேச செயலாளர்

அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் கேள்விப்பத்திரம் கோரும் கடைசி நேரத்திற்கு முன்னதாகவே இடப்பட வேண்டும். அல்லது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

4. ஒவ்வொரு கள்ளுத் தவறணைக்காகவும் பெற்றுக்கொள்ளும் இறுதி நேரம் கீழே மேலதிகமாக இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்ட நேரத்தில் அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பேருவளைப் பிரதேச செயலகத்தில் சமுகமளித்தல் வேண்டும்.

5. சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பிய கேள்விப்பத்திரதாரர் ''தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர்'' எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பின் அத்தினம் பி. ப. 2.30 மணிக்கு முன் பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் ஒரு தொகைப் பணம் முற்பணமாக பேருவளை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்து கீழ்க்காணும் மதுபானம் சேகரித்து விற்பனை செய்வது சம்பந்தமான நிபந்தனைகளுக்கு கைச்சாத்திடல் வேண்டும். இக்கட்டுப்பணமானது பணமாக அல்லது 'வங்கியில் செலுத்தப்படத்தக்க' எனக் குறிக்கப்பட்டு காசோலை மூலமாகவோ, மக்கள் வங்கி மூலமாகவோ அல்லது "பாதுகாப்புடைய காசோலை" என்ற பெயரில் செலுத்தப்பட்ட காசோலை மூலமாகவோ அல்லது அவ்வங்கியின் பெயரில் செலுத்தப்பட்ட காசோலையாகவோ இருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத மதுபான விற்பனை நிலையம் 2016.09.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரம் இவ்வர்த்தமானிக்கு அமைவாக முன்வைக்கப்படல் வேண்டும்.

7. மேலதிக விபரங்கள் தேவைப்படின் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. ஜீ. டீ. சதுர மல்ராஜ்,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பேருவளை,
பிரதேச செயலகம்,
2016, யூலை 25.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | கிராமம் | மதுபான நிலையம் திறக்கப்படும் நேரம் | மதுபான நிலையம் மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதித் திகதி | மீண்டும் விற்பனை செய்யும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பேருவளை பிரதேச சபைப் பிரிவு | அளுத்கம உபபிரிவு எல்லைக்குள் | மு. ப. 11.00– பி. ப. 5.00 | பி. ப. 2.00– இரவு 8.00 | 2,000 | 2016, ஓகத்து 25 ஆந் திகதி மு. ப. 10.30 மணி | 2016, செத்தெம்பர் 19 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை |

**குறிப்பு** : 2017 ஆம் ஆண்டிற்கு தற்போது மதுபான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ள இடத்தை மீண்டும் பெற்றுக்கொள்வது உறுதி செய்யப்படமாட்டாது. புதிய இடத்தில் மதுபான விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்படுமாயின் அது சம்பந்தமாக பேருவளை பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

8-204

---

## பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2017

2017, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2017, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982, ஓகத்து 2 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2016.08.16 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடிய குறித்த விண்ணப்பப்படிவத்தை முறைப்படி பூர்த்திசெய்து இங்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட வருமான சான்றுப்பத்திரத்துடன் முத்திரையிடப்பட்ட கடித உறையில் இட்டு அதன் இடது பக்க மூலையில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தின் பெயரையும் தெளிவாகக் குறிப்பிட்டு அந்த தவறணைக்காகவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுவதன் மூலமோ பதுளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திர படிவங்களைப் பூரணப்படுத்தும்போது கேள்விப்பத்திரப் படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூர்ண கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2016.08.16 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இந்தப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினைக் குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்குண்டு.

6. முன்குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2016.09.30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.

7. ஒருவர் தனி சலுகையினை விலைக்கு வாங்கிய நபர் என அறிவித்த பின்னர் பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன்னதாக அவர் பதுளை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாத கட்டணத்திற்கு கூடுதலான தொகையை என்னிடம் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைப்பத்திரத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் சம்பந்தமாக தெரிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களை பதுளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

என். ஜே.டி.அநுராதா,
உதவிப் பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை,
2016, யூலை 22.

## அட்டவணை

### பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2017

(2017.01.01 ஆந் திகதி தொடக்கம் 2017.12.31 ஆந் திகதிவரை)

| தொடர் இல. | தவறணையின் பெயர் மற்றும் இலக்கம் | பிரிவு | தவறணை அமைக்க வேண்டிய பிரதேச செயலாளர் பிரிவு | தவறணையை திறக்க வேண்டிய நேரம் | தவறணையை மூடும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் | கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப் படும் திகதியும் நேரமும் | மீண்டும் கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பதுளை 1 | பதுளை | பதுளை மாநகர சபை இல. 6 ஐக் கொண்ட பிரிவின் ஹுனுகொட்டுவ எனும் பெயருடைய அரச காணி | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | ரூ. 5,000 | 2016.08.16 ஆந் திகதி மு. ப. 10.30 | 2016.09.30 |

8-240

## இரத்தினபுரி மாவட்டத்தில் 02 ஆம் இலக்க பின்னவளை கள்ளுத்தவறணை விற்பனை - 2017

2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள கால எல்லைக்குள் கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் கள்ளு சில்லறைக்கு விற்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவை கீழுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்-

(i) 1982.08.20 ஆந் திகதியுடைய 207 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏலவிற்பனையின் படியும்,

(ii) மதுவரிச் சட்ட நிபந்தனையில் காட்டப்பட்டுள்ள எல்லா மதுபான விற்பனை உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவும்.

2. எல்லா விலை மனுக்களுடன் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கியில் அல்லது மாவட்டச் செயலகத்தில் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் இணைக்க வேண்டும். பின்னவலை இல. 02 கள்ளுத்தவறணைக்காக 1,500 ரூபாவைக் கொண்ட தொகை செலுத்தப்பட வேண்டும்.

3. இலங்கையில் உள்ள எல்லா பிரதேச செயலகங்களிலும் கொழும்பு மதுபான ஆணையாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட படிவத்தில் எழுதப்பட்ட விலைமனு உறையை ஒட்டி முத்திரையிட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் "பின்னவலை இல. 2 கள்ளுத் தவறணைக்கான விலைமனு" என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும். கள்ளுத் தவறணை மூடுவதற்கான காலம் முடிவடையும் முன் "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், இம்புல்பே" எனும் விலாசத்திற்கு அனுப்பவும் அல்லது இம்புல்பே பிரதேச செயலகத்தில் உள்ள விலைமனுப் பெட்டியில் போடவும்.

4. எல்லா விலைமனுக்காரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலைமனு சமர்ப்பிக்க வேண்டும்.

5. ஒருவருக்கு ஒரு கள்ளுத்தவறணைக்கு மேலாக விலைமனு கோரப்பட முடியாது. ஒரு கள்ளுத்தவறணைக்காக 5 பேருக்கும் மேலாக விண்ணப்பம் கோர முடியாது.

6. விலைமனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பணம் இலக்கத்திலும் எழுத்திலும் இருத்தல் வேண்டும். விலைமனுக்காரர் செய்யும் எல்லா திருத்தங்களிலும் அவரின் கையொப்பமும் திகதியும் இட்டு உறுதிப்படுத்த வேண்டும். எல்லா விலைமனுக்களும் சாட்சியாளர் இருவரினால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டும். நிபந்தனைகளுக்கு உட்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. வெற்றிபெற்ற விலைமனுக்காரர் விலைமனுவை வாங்கியதாகக் கருதப்பட்டு பின் கள்ளுத்தவறணை ஏற்கப்படும். பத்திரத்தில் கையொப்பமிட்டு இம்புல்பே பிரதேச செயலாளர் குறிப்பிடப்படும் பணத்தைப் பிணைப்பணமாக செலுத்த வேண்டும்.

8. 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10.30 மணிவரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் காலம் முடிவடைந்தவுடன் விலைமனுப் பெட்டி திறக்கப்படும். எல்லா விலைமனுக்காரரும் இங்கு கூறப்பட்ட நேரத்தில் இம்புல்பே பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

9. எந்தவொரு காரணமும் காட்டாது எந்தவொரு விலைமனுவையும் அல்லது விலை மனுக்களையும் சொந்த விருப்பின் பெயரில் நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

10. குறிப்பிட்ட தினத்தில் இந்த கள்ளுத்தவறணை விற்கப்படாவிட்டால் அதன் மீள்விற்பனை 2016.11.01 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் விலை மனு சமர்ப்பித்தலானது இந்த விலைமனு வர்த்தமானி அறிவித்தலின்படி குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய ஏற்றுக்கொள்ளப்படும்.

11. 2016 ஆம் ஆண்டிற்காக தற்போது கள்ளுத்தவறணையை நடாத்திக்கொண்டிருக்கும் இடத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைக் கூற முடியாது. விலைமனுக்காரரால் குறிப்பிட்ட பிரதேசத்தில் கட்டிடம் ஒன்றை (இடம்) தேடிக்கொள்ளலாம். அந்தக் கட்டிடத்திற்காக மதுபான ஆணையாளர் அலுவலகத்தில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கட்டிடத்தைப் பெற்றுத்தர உத்தரவுப்பத்திர அதிகாரி உடன்பட மாட்டார் என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

*12.* மேலதிக விபரங்களுக்கு இம்புல்பே பிரதேச செயலகத்திற்கு தொடர்பினை மேற்கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

ஜே. எல். சீ. கே. ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
இம்புல்பே.

பிரதேச செயலகம்,
இம்புல்பே,
*2016, யூலை 28.*

**அட்டவணை**

| *கள்ளுத்தவறணையின் பெயரும் இலக்கமும்* | *பிரிவு* | *அமைந்துள்ள பிரதேசம்* | *திறந்திருக்க வேண்டிய நேரம்* | *விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் நேரம், முடியும் நேரம்* |
|---|---|---|---|---|
| பின்னவலை கள்ளுத்தவறணை இல. 02 | கடவத்த கோரளை | பின்னவலை நகரம் | மு. ப. 11.00 மணியிலிருந்து பி. ப. 02.00 மணி வரை<br>பி. ப. 05.00 மணியிலிருந்து பி. ப. 08.00 மணிவரை | 2016.09.06 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை |

*8-379*

---

**உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு வழங்கல் - 2017**

*1982* ஆம் ஆண்டு ஓகத்து மாதம் *20* ஆந் திகதிய *207* ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட *1983* ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப *2017* ஆம் ஆண்டில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் *2016.08.25* ஆந் திகதி மு. ப. *10.30* மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

*2.* அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன் -

(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடம் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளைச் சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகிறது.

கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும் ;

(ii) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரம்–

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு ; மற்றும்

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்.

என்பன இணைக்கப்பட்டு,

கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்த உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.

5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரரின் "சிறப்புரிமைகளை வழங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய பிறநாட்டு குடிபான வகைகள் கள்ளுத் தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைப் படிவத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய இயலாத தவறணை குத்தகை 2016.09.23 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விகள் முன் வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

யூ. பீ. இந்திக்க அநுருத்த பியதாச,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
கம்பளை,
2016, யூலை 25.

**2017 ஆம் ஆண்டிற்கு கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் அட்டவணை**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1. வஹுக்கப்பிட்டிய | உடபலாத்த | வஹுக்கப்பிட்டிய கிராமத்திற்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2016.08.25, மு. ப. 10.30 மணி | 1,500 |

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 2. புஸ்ஸல்லாவ | உடபலாத்த | புஸ்ஸல்லாவ நகரத்தின் எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2016.08.25, மு. ப. 10.30 மணி | 3,000 |

8-221/2

---

## கண்டி கடவத்சத்தர கங்க வட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2016/ 2017

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக கள்ளுத் தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2016/2017 ஆம் ஆண்டில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2016.08.29 ஆந் திகதி முற்பகல் 11.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணபப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்-

(அ) கேள்வி வைப்புப் பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்,

(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப் பத்திரத்துடன் இணைத்தல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விக்காரர்களுக்கு மேற்படி கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைப்பத்திரத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையெழுத்தொப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) பூரணமற்ற விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட –

(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்,

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு அந்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விக்காரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பில் இடுதல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" என குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும். தேவையானளவு முத்திரைகளை ஒட்டி மதுவகை தவறணைகள் ஒப்பந்தப்பத்திரத் தொகுதியில் கையொப்பமிடல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்வி பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

7. ஏதாவது ஒரு கேள்வியை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அந்த ஒவ்வொரு ஆளினதும் சொந்த முகவரியை வெவ்வேறாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. கள்ளுத் தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க் கணக்கில் கள் விநியோகிக்கப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையிலும் வேறு காரணங்களுக்காகவும் இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்க கள்ளுத் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுக்க வேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு குத்தகைக் கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்பட மாட்டாது.

10. மேற்படி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்யமுடியாதுபோன எஞ்சிய கள்ளுத் தவறணைகளை மீண்டும் 2016.10.14 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்த கேள்விகளை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை குத்தகைக்கு விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ள முடியும்.

பி. எம். பீ. ஜீ. பீ. வீ. பண்டார,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை,
2015, யூலை 27.

*அட்டவணை*

***கண்டி மாவட்டத்தில் அனுமதியளிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல் - 2016/2017***

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 வட்டபுலுவ | கண்டி பிரிவில் இல. 20 மாயாவ மற்றும் இல. 7, மாப்பனா வதுர தேர்தல் பிரிவு | கட்டுகஸ்தொட்டை வீதியில் அந்த வீதியும் திருகோணமலை வீதி சந்தியில் கட்டுகஸ்தொட்டை வீதியும் வட்டாரந்தென்ன சந்திக்கும் இடையிலான பாதை கண்டி மாநகரில் இல. 20 - மாயாவ மற்றும் இல. 7 - மாபனாவதுர தேர்தல் பிரிவில் அமைந்துள்ள பிரதேசம் | மு. ப. 11.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை மற்றும் பி. ப. 5.00 மணி தொடக்கம் பி. ப. 8.00 மணி வரை | 2016.08.29 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

***கள்ளுத்தவறணை குத்தகை கேள்விகளுக்கான வைப்புப்பணம் - 2016/2017***

| | | | |
|---|---|---|---|
| இல. 01 | வட்டபுலுவ | கள்ளுத் தவறணைக்கான குத்தகை | ரூபா 5,000 |

8-366/ 1

---

## இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை இல. 01 - கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2017

2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையுள்ள காலஎல்லைக்குள் இங்கு கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் சில்லறையாக கள்ளு விற்பதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் :-

1. 1982.08.20 ஆந் திகதியுடைய இலக்கம் 207 வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏல விற்பனை நிபந்தனைகளின்படியும்.

2. மதுவரிச்சட்ட நிபந்தனையில் காட்டப்பட்டுள்ள எல்லா மதுபான உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

   எல்லா விலை மனுக்களையும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கியின் "பிரதேச செயலகம் - பலாங்கொடை" எனும் கணக்கில் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்று 1,500 ரூபாவினை செலுத்தி "பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணை" எனக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. இலங்கையின் எல்லாப் பிரதேச செயலகங்களிலும் அல்லது கொழும்பு மதுவரி திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட படிவத்தில் விலை மனு உரையையொட்டி (சீல் வைத்து) இடப்பக்க மேல் மூலையில் "பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணைக்கான விலை மனு" என்று தெளிவாக குறிப்பிட்டு விலை மனு திகதி முடிவடைய முன்பு பலாங்கொடை பிரதேச செயலகத்தின் விலைமனு பெட்டியில் அல்லது "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பலாங்கொடை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

4. எல்லா விலை மனுக்காரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலை மனுவை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. ஒருவர் ஒரு கள்ளுத்தவறணைக்கு மேல் விலை மனு கோரமுடியாத அதே வேளை இருவர் சேர்ந்தும் கள்ளுத்தவறணைக்கு விலை மனு கோரமுடியாது.

6. விலை மனுக்காரரால் குறிப்பிடப்பட்ட விலை மனுவின் தொகை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட வேண்டும். விலைமனுக்காரர் எல்லா விலை மனுக்களிலும் கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். எல்லா விலை மனுக்களிலும் சாட்சியாளர் இருவரால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிபந்தனைகளுக்குட்படாத விலை மனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. விலை மனுக்கோரலில் வெற்றிபெற்ற மனுக்காரர் விலை மனுவை வாங்கியவராகக் கருதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட பின் பலாங்கொடை பிரதேச செயலகத்தின் நிபந்தனைகளில் கையொப்பமிட்டு பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் பணத்தினை செயலகத்தில் வைப்பிலிட்டு கள்ளுத் தவறணையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

8. 2016.09.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும். விலை மனு கோரப்பட்டு முடிவடைந்ததும் விலை மனு பெட்டி திறக்கப்படும். அச்சமயம் எல்லா விலை மனுதாரர்களும் குறிப்பிட்ட நேரத்தில் பலாங்கொடை பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

9. 2016.09.07 ஆந் திகதியன்று குறிப்பிட்ட நேரத்தில் இந்த விற்பனை நடைபெறாவிட்டால் அது மீண்டும் 2016.11.02 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

10. எந்தவொரு விபரமும் காட்டாது விலைமனுவை சொந்த விருப்பின் பேரில் நிராகரிக்கும் உரிமை பலாங்கொடை பிரதேச செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

11. 2016 ஆம் ஆண்டிற்கான தவறணை நடாத்தும் இடத்தில் இடத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதனைக் கூறமுடியாது. திறமையான விண்ணப்பக்காரரால் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தின் கட்டிடமொன்றை தேடிக்கொள்ள வேண்டும். அந்த கட்டிடத்திற்காக மதுபான ஆணையாளர் அவர்களின் அனுமதியைப் பெற வேண்டும். கட்டிடத்தைப் பெற்றுக்கொடுக்க ஆணையாளர் உடன்பாடில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

12. மேலதிக விபரங்களை பலாங்கொடை பிரதேச செயலகத்தில் கேட்டறிந்து கொள்ளலாம்.

சம்பிக நிரோஷ் தர்மபால,
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2016, யூலை 27.

**அட்டவணை**

| கள்ளுத்தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | அமைவிடம் | கள்ளுத்தவறணை திறக்கப்பட வேண்டிய நேரம் | விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் காலமும் |
|---|---|---|---|---|
| இல. 01 பலாங்கொடை | பலாங்கொடை நகர எல்லை | பலாங்கொடை நகர சபைக்குட்பட்ட பிரதேசம் | மு. ப. 11.00 மணி முதல்- பி. ப. 2.00 மணி வரை பின் பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 2016.09.07 மு. ப. 10.30 |

8-349

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : சொலசவி (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனியின் இல.: பீவி 114993*
*பதிவு முகவரி: இல. 119/2, கின்சி வீதி, கொழும்பு 08*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2016.07.13*

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*8-182*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : சொலஜனனி (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனியின் இல.: பீவி 115004*
*பதிவு முகவரி: இல. 119/2, கின்சி வீதி, கொழும்பு 08*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2016.07.13*

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*8-183*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : எச் கே எனர்ஜி (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனி முகவரி : பிவி 115006*
*பதிவு முகவரி: இல. 119/2, கின்சி வீதி, கொழும்பு 08*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2016.07.13*

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*8-184*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : டிகெத்லன் லங்கா ஸ்போர்ட்எக்ஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனி இல.: பீவி 114976*
*பதிவு முகவரி: இல. 47, அலெக்சாண்ட்ரா பிளேஸ், கொழும்பு07*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2016.07.12*

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*8-185*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : மிரகல் டெஸ்டிநேஸன்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்*
*பதிவிலக்கம் : பீவி 107646*
*பதிவு முகவரி: இல. 23 மைல்கல், பேந்திவெவ, பொலன்னறுவை*

செயலாளர்கள்.

*8-244*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : சிலோன் கொகநெட் ஜல் ( பிறைவேட்) லிமிட்டட்*
*பதிவிலக்கம்: பிவீ 113795*
*பதிவு முகவரி: இல. 20/A, சுலைமான் அவின்யூ, ஜாவத்தை, கொழும்பு 05*

செயலாளர்கள்.

*8-245*

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஏ.எல். ஒடோ டிரேடர்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவி 112873
கூட்டிணைப்புத் திகதி: 2016.04.04
பதிவு முகவரி: இல. 710, கண்டி வீதி, தொரண சந்தி, களனிய

செயலாளர்.

8-247

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : அக்வா கெயர் வோர்டர்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவி 113456
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2016.05.05
பதிவுமுகவரி: இல.644/1,ஸெம்சன் எஸ்டேட், மல்லவப்பிட்டி, குருநாகல்

செயலாளர்கள்.

8-248

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : யு எஸ் எஸ் ஈ கே எஸ் ஜே சீ - க்லீன் என் வயர் மன் டல் சேர் விசஸ் ஜொய்ன்ட் வென்சர் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவி 113776
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2016.04.19
பதிவு முகவரி: இல. 397, கலஹிட்டியாவ தெற்கு, கனேமுல்லை

செயலாளர்கள்.

8-249

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : மை ஹோப் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவி 101057
பதிவு முகவரி: இல.233, ஜாயா வீதி, மருதமுனை, கல்முனை

கம்பனிச் செயலாளர்.

8-282

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கேற்ப லக்டா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் 2016, யூன் 30 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது பற்றிய அறிவித்தல் இத்தால் தரப்படுகிறது .-

கம்பனியின் பெயர் : லக்டா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கூட்டிணைப்புத் திகதி: 2016.06.30
கம்பனியின் இல.: பீவி 114746
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: இல. 116, பொல்வத்த, மில்லேவ

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
பீ.ஈ. சம்பிக ரொட்ரிகோ
கம்பனிச் செயலாளர்.

0772205857

8-285

## பெயர் மாற்றம் பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கேற்ப 2016,மே 18 ஆந் திகதி கம்பனியின் பெயர் மாற்றப்பட்டது பற்றிய அறிவித்தல் இத்தால் தரப்படுகிறது .-

கம்பனியின் முன்னைய பெயர் : திலினி புறொபர்டி டிவலொபர்ஸ( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இல.: பீவி 89421
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: இல. 700/2/1, நீர்கொழும்பு ரோட், மஹபாகே, இராகமை
கம்பனியின் புதிய பெயர் : திலினி புறொபர்டி டிவலொபர்ஸ் என்ட் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பீ.ஈ. சம்பிக ரொட்ரிகோ,
கம்பனிச் செயலாளர்.

0772205857

8-286

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 334(2) ஆம் பிரிவின் கீழ் செலெக்மா கார்மன்ட்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட் (பதிவிலக்கம் பீவீ 8224)*

*கீழ்க் குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களுக்காக கம்பனியின் கடன் கொடுத்தோர்களின் ஒரு கூட்டம் 14 ஆம் மாடி, மேற்குக் கட்டிடம் , உலக வர்த்தக நிலையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 01 என்ற முகவரியில் 2016, ஓகத்து 15 ஆந் திகதி புதன் கிழமை மதியம் 12.30 மணிக்கு நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

* *கம்பனியின் கடன்கொடுத்தவர்களின் ஒரு பட்டியல் மற்றும் அவர்களின் உரிமைக் கோரிக்கைக்கான ஒரு மதிப்பிடப்பட்ட தொகை என்பவற்றுடன் சேர்த்து 2016, யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறான கம்பனியின் அலுவல்களின் நிலைமை தொடர்பான முழுமையான கூற்றை முன்வைப்பதற்கும்,*

* *கடன் கொடுத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையை கலந்துரையாடுவதற்கும் மற்றும் அவர்களின் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் உடைமைகள் என்பவற்றின் மீதான மதிப்பிடப்பட்ட தொகைக்கு உடன்படுவதற்கும்,*

* *கம்பனியின் அலுவல்களை ஒடுக்குதல் மற்றும் அதன் சொத்துக்களை பகிர்ந்தளித்தல் போன்ற நோக்கங்களுக்காக ஒரு தீர்த்துக்கட்டுனரை நியமிப்பதற்கும்,*

*செலெக்மா கார்மன்ட்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்*
*கம்பனிச் செயலாளர்கள்.*

கோர்பரேட் சேர்விஸஸ் ( பிறைவேட்) லிமிட்டட்,
இல. 216, டி சேரம் பிளேஸ்,
கொழும்பு 10,
இலங்கை.

*8-294/1*

---

### விசேட பொதுக் கூட்டம் தொடர்பான அறிவித்தல்

*கீழ்க் குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களுக்காக செலெக்மா கார்மன்ட்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட் அங்கத்தவர்களுக்கான ஒரு விசேட பொதுக்கூட்டம் 14 ஆம் மாடி, மேற்குக் கட்டிடம் , உலக வர்த்தக நிலையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 01 என்ற முகவரியில் 2016, ஓகத்து 15 ஆந் திகதி புதன் கிழமை மதியம் 12.00 மணிக்கு நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

| 8 | Sewing Machine | 747 F-514M2-24 | Siruba 4 Thread Overlock M/c Total |
| 6 | Sewing Machine | 747 F-514M2-24 | Siruba 5 Thread Overlock M/c Total |
| 12 | Sewing Machine | 767F-516M2-324 | Siruba 6 Thread Overlock M/c Total |
| 4 | Sewing Machine | LBH 781 U | JUKI Button Hole Machine Total |
| 1 | Sewing Machine | LH 3128 F | JUKI Double Needle Machine Total |
| 1 | Sewing Machine | LH 3168 SF | JUKI Double Needle Split Bar M/c Total |

| எண்ணிக்கை | இனமும் வகையும் | மாதிரி இல. | பொருட்களின் விபரம் |
|---|---|---|---|
| 10 | Sewing Machine | DB2-B777A-3 | BROTHER Single Needle Machine Total |
| 25 | Sewing Machine | DB2-DD7100-403A -B40 | BROTHER Single Needle M/c with dry head Total |
| 2 | Sewing Machine | LK3-B430E | BROTHER Bartack M/c Total |
| 4 | Sewing Machine | LK3-B438-E | BROTHER Lockstich Button Attach M/c Total |
| 10 | Sewing Machine | DB2-B721-3 | BROTHER Single Needle M/c Needle Feed M/c Total |
| 1 | Sewing Machine | DFB-1406PMD | Kansai Special 6 Needle Double Chaintich M/c Total |
| 1 | Sewing Machine | BS-101 | Treasure Blind Stitch Machine BS 101 Total |
| 110 | Sewing Machine | DDL 8500 | JUKI Single Needle Split Bar M/c Total |
| 4 | Sewing Machine | LH 3128SF | JUKI Double Needle Machine Total |
| 4 | Sewing Machine | LH-3168SF | JUKI Double Needle Split Bar M/c Total |
| 10 | Sewing Machine | DLM 5200ND | JUKI DLM-5200ND Total |
| 10 | Sewing Machine | DDL 5550N | JUKI DDL-555ON-7WB/CP-160 Total |
| 4 | Sewing Machine | 747 F-514M2-24 | "YAMATA" FY 747 Overlock 4 Thread Total |
| 3 | Sewing Machine | 737 FY | "YAMATA" FY 737 Overlock 3 Thread Total |
| 2 | Sewing Machine | FY 31016-04 | "YAMATA" FY 31016-04 DB Flat lock Total |
| 10 | Sewing Machine | GC 5550 | "YAMATA" Single Needle Mc Total |
| 1 | Sewing Machine | W 500 | Flat Lock Mc Total |
| 1 | Sewing Machine | 101AF | Reece Button Hole Mc Total |
| 1 | Sewing Machine | 767 F-516M2-324 | "SIRUBB" High Speed Six Thread overlock Mc |
| 1 | Sewing Machine | 767 F-516M2-324 | "SIRUBB" High Speed Six Thread overlock Mc |
| 1 | Sewing Machine | 767 F-516M2-124 | "SIRUBB" High Speed Six Thread overlock Mc |
| 1 | Sewing Machine | 767 F-516M2-324 | "SIRUBB" High Speed Six Thread overlock Mc |
| 1 | Sewing Machine | C007-W812-356 CRL/CSA | "SIRUBA" Cylinder Bed Flat Lock Mc |
| 1 | Sewing Machine | M 600 | "PEGASUSS" 4 thread overlock Mc |
| 1 | Sewing Machine | 7J-W22ZA/FQ/FEC | "SIRUBA" Flat Bed Flat lock Mc |
| 2 | Sewing Machine | 7J/W822-356/CRL CSA/UJP | "SIRUBA" CYLINDER Bed Flat lock Mc |
| 2 | Sewing Machine | GD2302-10 | sewing machines |
| | Sewing Machine | | sewing machines - clearing charges |
| 1 | Sewing Machine | GD8-4 | High speed double needle lockstictch sewing machine |
| | Sewing Machine | DDL-5550N-7 | sewing machines-clearing charges |
| 1 | Sewing Machine | GC5550-4-5D | Computerised high speed lockstitch sewing machines |
| | Sewing Machine | | sewing machines-clearing charges |
| 5 | Sewing Machine | 1818 F-MI | SIRUBA BRAND ONE NEEDLE LOCKSTITCH MACHINE |
| 10 | Sewing Machine | 747F-514M2-24 | SIRUBA HIGH SPEED 2 NEEDLE 4 THREAD OVER LOCK MACHINE |
| 6 | Sewing Machine | 767-F-516M2-324 | SIRUBA HIGH SPEED 3 NEEDLE 6 THREAD OVER LOCK MACHINE |
| 3 | Sewing Machine | C 007- J-W122-356 | SIRUBA HIGH SPEED CYLINDERBED CHAINSTITCH FLATLOCK MACHINE |
| 7 | Sewing Machine | F 007-J-W122-356 | SIRUBA HIGH SPEED FLATBED CHAINSTITCH MACHINE |
| 1 | Sewing Machine | C 007 J-W812-356/ CRL | SIRUBA HIGH SPEED CYLINDERBED CHAIN STITCH MACHINE WITH LEFT HAND KNIFE TRIMMING DEVICE |
| 1 | Sewing Machine | | TFG |

**மாவத்தகம, ஏற்றுமதி அபிவிருத்தி வலயம், 02 ஆம் இலக்கத்திலுள்ள காணியில் தற்சமயம் வைக்கப்பட்டுள்ள மாற்றுறுப்புக்கள், உதிரிப்பாகங்கள், ஆயுதங்கள்- நிறுவனம் தற்சமயம் செயற்படும் இடம், இதன் பின்னர் காலத்திற்குக் காலம், எந்தவொரு காலத்திலும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வளவு,, எந்தவொரு களஞ்சியசாலை, குறிப்பிடப்பட்ட அசையும் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன காலத்திற்குக் காலம் களஞ்சியப்படுத்தப்பட்டு, வைத்திருக்கப்பட்டு, வைக்கப்பட்டுள்ளதோடு, அசையும் இயந்திர சாதனங்கள் மாற்றுறுப்புக்கள் மற்றும் உபகரணங்கள் முழுவதும் பாவனைக்காலம் எதுவாக இருந்தாலும் குறிப்பிட்ட அசையும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், மாற்றுறுப்புக்கள், உதிரிப்பாகங்கள் என்பனவற்றிற்குப் பதிலீடாகக் கொண்டுவரப்பட்டு, காலத்திற்குக் காலம் அல்லது சகல வேளைகளிலும், மேலே குறிப்பிட்ட எந்தவொரு களஞ்சியசாலை வளவு மற்றும் நிறுவனத்தினால் காலத்திற்குக் காலம் வைக்கப்பட்டு இதன் பின்னர் சகல வேளைகளிலும் நிறுவனம் வெளியே எடுத்துச் செல்ல அல்லது வர்த்தக நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொள்ளவென, குறிப்பிட்ட அசையும் இயந்திர சாதனங்கள் மற்றும மாற்றுறுப்புக்கள், உபகரணங்கள் என்பனவற்றை களஞ்சியப்படுத்தி அல்லது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வைத்திருத்தல்,**

பிரசித்த நொத்தாரிசு எம்.கே. லியனகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதியிடப்பட்ட 311 மற்றும் பிரசித்த நொத்தாரிசு கே.டீ.ஏ.வீ. விஜேகோன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதியிடப்பட்ட 200 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம்,இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் சட்டத்தின்படி கூட்டிணைந்த PV13482 என்ற பதிவிலக்கத்தைக் கொண்ட இல. 02, ஏற்றுமதி அபிவிருத்தி வலயம், மாவத்தகம என்னுமிடத்தில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள இகோ அபரல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் (இதன்பின்னர் கம்பனி என அழைக்கப்படும்) நிறுவனத்தினால்,

டிஎப்சிசி வங்கி பீஎல்சிக்கு ( டிஎப்சிசி வர்தன வங்கி பிஎல்சி யின் பதிவாளர்) அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து டிஎப்சிசி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி

2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.11.00மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;

(4) மொத்த விளம்பரச் செலவு 2,50,000 ரூபா ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-237 137 1 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் பீஎல்சி சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.'

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
124 வருடகால மகோன்னத சேவை.

தலைமை அலுவலகம் :
24, டொரிங்டன் வீதி,
கண்டி.

தொலைபேசி : 081-2227593

தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371
மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk

நகர அலுவலகமும் காட்சியறையும்:
290, ஹவ்லொக் றோட்,
கொழும்பு 5.

தொலைபேசி : 011-2502680
2585408

தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176
மின்-அஞ்சல் : schokman@samera1892.com

இணையத்தளம் : www.sandslanka.com

8-207

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ –கிருளபனைக் கிளை

(முன்பு ஹற்றன் நெஷனல் பாங்க் லிமிட்டட்)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விலை மதிப்புமிக்க ஆதனம் பகிரங்க ஏல விற்பனை*

**கடன் எடுத்த சரத் பாரக்கிரம சிரியாஸ் கொத்தலாவல விக்ரமராச்சி மில்லவகே சன்ன காலிங்க குமாரரத்ன விக்ரமராச்சி மில்லவகே பிரியந்தி குமாரரத்ண அல்லது பிரியந்தி சுரேந்தரனி கொத்தலாவல ஹற்றன் நெஸனல் வங்கி பிஎல்சி சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம்.பி.எம். மோட்டி 2015.06.18 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 6163 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவைச் செலுத்துவதில் தவறுகை புரிந்துள்ளதாலும், மிகுதி பணமும் அதன் வட்டியும் ஏலதாரரின் சொல்லப்பட்ட கட்டணங்களும் மற்ற கொடுப்பனவுகள் எல்லாம் சேர்த்து அறவிடுவதற்காக ஹற்றன் நஷனல் வங்கி பிஎல்சி மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் இக்கீழ் விபரிக்கப்பட்ட ஆதனத்தை என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.**

இக் கீழ் விபரிக்கப்பட்ட ஆதனத்தை 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி காலை 11.00 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

மேல் மாகாணம், அத்தனகல்ல பதிவு எல்லையில் கம்பஹா மாவட்டம் உடகாபத்து சியன கோரளையில் மெகடபொத்த கிளை அலுவலகம் அத்தனகல்ல பிரதேச சபை எல்லையில் அத்தனகல்ல மாவட்ட செயலாளர் தொகுதியில் இலக்கம் 352 ஊ கிராம அலுவலர் தொகுதயில் போப்பத்த கிராமத்தில் அமைந்துள்ள புண்சி குருந்துவத்த காணியின் நிலஅளவையாளர் பி.வேதாசலம் 2004.06.17 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 2342 இல் காண்பிக்கப்பட்ட லொட் A, இக்காணியின் விஸ்தீரணம் முப்பத்து மூன்று ஏக்கர் மற்றும் முப்பத்து ஆறு பேர்ச்சஸ் ( 33ஏ.0றூ.36பே.) இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.**- 2016.06.03 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், “லக்பிம”, “டெயிலி மிரர்” மற்றும் “தினக்குரல்” ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்.**- கிரிந்திவெல சந்தியிலிருந்து 2.5 மீற்றர் அத்தனகல்ல ரோட்டில் உராபொல புணச்சி குருந்துவத்த எஸ்டேட் சென்று காணியை காணமுடியும். இந்த காணி அத்தனகல்ல கிரிந்திவெல்ல ரோட்டில் இடது பக்கம் உள்ளது.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) உள்ளூர் அதிகார சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல தரகு விற்பனை விலையின் 2 1/2 % ( நூற்றுக்கு இரண்டரை);
(4) விற்பனைச் சான்றிதழுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2000 ரூபா ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ரூபா;
(6) விற்பனை சம்பந்தமாக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;

மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பணமாக வங்கிக்கு செலுத்த வேண்டும்.மிகுதிப் பணம் 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்தத் தவறினால் முற்பணம் 10% திருப்பி செலுத்தப்பட மாட்டாது. காணியை மீண்டும் ஏலத்தில் விடப்படும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- ‘‘சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10’’ உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2664664.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. 011-2445393,011-2396520.
தொலைநகல்: 011-2445393

8-338

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 4159262 மற்றும் 76014175

1. கடவத்த, இஹல பியன்வில, ஒரெஞ் பில் வத்த, இல. 449/71 யுனிவர்சல் பிலாஸ்றிக்ஸ் ஏக உரிமையாளர் திரு. அஷேன் விரங்க சமரசிங்ஹ ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

2. இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2016.06.17 ஆந் திகதி 1972 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2016.06.08 ஆந் திகதிய டெய்லி நியூஸ், தினகரன், தினமின ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையும் இல. 50/3, விஹார மாவத்தை,

கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T&H ஏல நிறுவனத்தின் ஏலதாரரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2016.03.09 ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல்மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை அதிகாரி பற்றுவில் பியகம பிரதேச செயலாளர் பிரிவில் மாவரமண்டிய, 269A ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில், பியகம பிரதேச சபை எல்லைகளுள் இஹல பியன்விலயில் அமைந்த சுற்று வீதி, கொஸ்லந்தவத்த, வரிமதிப்பிலக்கம் 16/8 ஐக் கொண்ட ஒரேஞ் பில் எஸ்டேற் என தற்போது அறிந்ததும் 'கொஸ்கஹலந்த மற்றும் கஹடகஹவத்த' என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் டி. டி. சீ. ஏ. பெரேரா தயாரித்த 1996, செத்தெம்பர் 14 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 781 இல் விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : வரைபடம் இல. 5052 இல் துண்டு 70 என அடையாளமிட்டு விபரித்ததும் 20 அடி அகல பாதையும் ; கிழக்கு : வரைபடம் இல.5052 இல் விபரித்த துண்டுகள் 70, 85, 84 மற்றும் 83 உம்; தெற்கு : வரைபடம் இல. 5052 இல் குறிக்கப்பட்ட துண்டு 77 மற்றும் 15 அடி அகலப் பாதையும் துண்டு 83, துண்டு R8 உம்; மேற்கு : வரைபடம் இல. 5052 இல் துண்டுகள் 77 மற்றும் 72 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 781 இன் படி ஒரு றூட் பதின் மூன்று தசம் ஐந்து சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 13.50பே.) விஸ்தீரண முடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப் பதிவகத்தில் C 807/04 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் உத்தரவு பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. செனவிரத்ன தயாரித்த 1988, பெப்புருவரி 3 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 5052 இல் விபரித்த துண்டுகள் R5, R7, R13 மற்றும் R8 நெடுகவும் வழி உரிமையும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி

(திருமதி) ஆர். கே. ஜயசுந்தர,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கடவத்த மேற்தரக்கிளை.

8-340

---

**சம்பத் வங்கி பீஎல்சி**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஜீ. அன்ட் எச் என்ட்ட பிரைசர்ஸ்
கணக்கு இல. 0065 1000 2782

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சி பணிப்பாளர் சபையினால் 2016.04.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2016.07.22 ஆம் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2016.07.28 ஆந் திகதிய திவயின, ஐலன்ட், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான அறுபத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து எழுநூற்று அறுபத்தெட்டு ரூபா முப்பத்தைந்து சதம் (ரூபா69,98,768.35)2016, ஏப்பறல் 12ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை பதினொரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா ( ரூபா 11,25,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) ஐம்பது இலட்சம் ரூபா ( ரூபா 50,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து(15%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு, பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள்,நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ.டபிள்யூ ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2016.08.29 ஆந் திகதி பி.ப. 1.00 மணிமுதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், வட மாத்தளை கோரலேயின் வகாபனா பல்லேசிய பத்துவை தம்புள்ளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் தெற்கு லேனதொர கிராம அலுவலர் பிரிவு (E411-B) லேனதொர கிராமத்தில் அமைந்த "கெப்பெட்டிய வத்தையின் தெற்குப் பகுதி" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ராஜசேகரன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1991, மே 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 2025 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : எச்.எம்.கே. புன்சிபண்டா உரிமம் கோரும் காணி; கிழக்கு : அரச காணி; தெற்கு : எச்.எம் அப்புஹாமி மற்றும் எம். ஹப்புஹாமி உரிமம் கோரும் காணி மற்றும் ; மேற்கு : மாத்தளை முதல் தம்புள்ளை வரையான பாதை. ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் முப்பத்தி ஆறு தசம் ஐந்து சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 36.50பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன், கூறப்பட்ட இல. 2025 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட இல. 2025 எனும் வரைப்படத்தில் குறிப்பிடப்பட்ட காணி கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடு செய்யப்பட்டதாகும்:

மேற் கூறப்பட்ட லேனதொர கிராமத்தில் அமைந்த "கெப்பெட்டிய வத்தையின் தெற்குப் பகுதி" என்றழைக்கப்படும் காணிக்கு அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : உக்குபண்டா உரிமம் கோரும் காணியின் வேலி ; கிழக்கு : தாங்கி ஒன்றை அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட அரச காணி; தெற்கு : எச். எம். அப்புஹாமி மற்றும் எம்.

ஹப்புஹாமி உரிமம் கோரும் காணி மற்றும் ; மேற்கு : ஹை வீதி என்ற இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் ஒரு றூட் மற்றும் முப்பத்தி ஆறு தசம் ஐந்து பேர்ச் (1ஏ.1றூ.36.50பே.) மற்றும் மாத்தளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் L 28/128 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-359

---

## சம்பத் வங்கி பீஎல்சி

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

பீ.ட.நிஷாந்த கணக்கு இல. 0181 5000 1397

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சி பணிப்பாளர் சபையினால் 2016.06.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2016.07.29 ஆம் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2016.07.21 ஆந் திகதிய திவயின, ஐலன்ட், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே நாற்பத்தி ஆறுஇலட்சத்து ஆறாயிரத்து நூற்று நாற்பத்தியாறு ரூபா ஐம்பத்து ஆறு சதம் (ரூபா 1,46,06,146.56) 2016,மே 16 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே இருபத்தி ஒரு இலட்சத்து முப்பத்தியிரண்டாயிரம் ரூபா (ரூபா1,21,32,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்து வீதம் ( 10%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு, பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே. ஈ.சேனாபத்தி என்பவர் மூலமாக 2016.09.02 ஆந் திகதி பி.ப.1.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், தெற்கு தல்பெ பத்துவையின் ஹபராதுவை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் இல. 144D/கொக்கல/பிரத்தியேக 1 கிராம அலுவலர் பிரிவிற்குள், கொக்கலையில் அமைந்த "ஆஹாஸ்யானா பூமி" என்றழைக்கப்படும் காணிக்கு நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட F. V இல. 1786 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 40 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : அதே வரைப்படத்தின் லொட் 39; கிழக்கு : இக் காணியின் லொட் 41; தெற்கு : கூறப்பட்ட வரைப்படத்தின் லொட் 42 மற்றும் ; மேற்கு : கூறப்பட்ட வரைப்படத்தின் லொட் 38 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இரண்டு தசம் ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 2.7பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன், காலி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் LDO S 05/19 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது

கூறப்பட்ட லொட் 40 அண்மையில் அளக்கப்பட்ட நில அளவீட்டிற்கமைவாக கீழே விபரிக்கப்பட்டவாறாகும்.

மேற்கூறப்பட்ட கொக்கலையில் அமைந்த "ஆஹாஸ்யானா பூமி" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். ஜயதுங்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, ஏப்பிறல் 27ஆந் திகதியிடப்பட்ட இல. 13/43 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 40 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : கூறப்பட்ட வரைப்படத்தின் லொட் 38 மற்றும் 39; கிழக்கு : லொட் 39 (வீடுகளிலிருந்து மாகல்தொட்ட வீதி வரையான பாதை) மற்றும் இக் காணியின் லொட் 41; தெற்கு : கூறப்பட்ட வரைப்படத்தின் லொட் 41 மற்றும் 42 மற்றும் ; மேற்கு : லொட் 42 (வீடுகளிலிருந்து மாகல்தொட்ட வீதி வரையான பாதை) மற்றும் கூறப்பட்ட வரைப்படத்தின் லொட் 38 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இரண்டு தசம் ஏழு பேர்ச். (0ஏ. 1றூ. 2.7பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-358/3

---

## சம்பத் வங்கி பீஎல்சி

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

எல்.பீ.என். சமரசேக்கர , கணக்கு இல. 0010 5004 5885

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சி

பணிப்பாளர் சபையினால் 2016.06.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2016.07.29 ஆம் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2016.07.21 ஆந் திகதிய திவயின, ஐலன்ட், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஐம்பத்தொரு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து ஐநூற்று ஆறு ரூபா ஐம்பத்து ஏழு சதம் ( ரூபா 51,44,506.57) 2016,மே 06 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நாற்பத்தி எட்டு இலட்சத்து தொண்ணூற்று எண்ணாயிரத்து அறுநூற்றுப் பத்துரூபா தொண்ணூற்று ஆறு சதம்( ரூபா48,98,610.96) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு ஒன்பது தசம் ஐந்து வீதம் (9.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு, பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத் துக்கள்,நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2016.09.02 ஆந் திகதி மு.ப. 11.30 மணிமுதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் நகர சபை எல்லைகளுக்குள் இல. 417D கிராம அலுவலர் பிரிவிற்குள், உயன்வத்தையில் அமைந்த சிரிமங்கள மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 50 ஐ ஏற்ற “திசாவகேவத்த எனும் பரகாஹாவத்த தற்போது அயோத்யா என அழைக்கப்படும் பிரித்து வேறாக்கப்பட்ட பிரத்தியேக பாதித் துண்டின் லொட் 1 இன் ஒன்றிணைக்கப்பட்ட 1A மற்றும் 1B லொட் D இன் உப பிரிவு” என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சுஜீவ லியனகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, சனவரி 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 2015/ 05 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் D1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : தர்மாராமை வீதி ; கிழக்கு : இக் காணியின் லொட் D2 ; தெற்கு : இக் காணியின் லொட் D 12 மற்றும்; மேற்கு : சிறிமங்கள வீதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் எட்டு தசம் ஆறு சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 8.60பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன். கூறப்பட்ட இல. 2015/05 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தறை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 661/145 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-358/2

---

### பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பள்ளேபற்று, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, மாநகர சபை எல்லைக்குள் கங்கொடையில் அமைந்துள்ளதும் “சியம்பளாகஹஓவிட்ட என்ற பக்மீகஹஓவிட்ட , பறகஹஓவிட்ட, குருந்துவத்த மற்றும் பெலன்கஹஓவிட்ட ’’ என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. ஏ.டி.ஜீ. விஜேரட்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1999.01.26 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 795 இல் துண்டு 1 என அடையாள மிடப்பட்டுள்ளதுமான காணியினது மற்றும் நுகேகொடை, தெல்கந்தை காணி பதிவகத்தில் தலைப்பு எம். 2444/61 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏலவிற்பனை.

**(காணியின் விஸ்தீரணம்:0ஏ.0றூ.28.60பே.)**

(கடப்பாடுடையவர்களான /ஈடுவைத்தவர்களான லக்சென் உதார கொடிதுவக்கு பிரசித்த நொத்தாரிசு இந்ரா பதுகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2011, யூன் 17 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 348 இன்மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்)

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி** .- நுகேகொடை சுப்பர் மார்க்கட் சந்தியிலிருந்து கட்டிய சந்திவரை பழைய கெஸ்பேவ வீதி வழியே ஏறக்குறைய 800 மீற்றர் தூரம் சென்று மிரிஹான வீதிக்கு இடப்பக்கம் திரும்பி ஏறக்குறைய 100 மீற்றர் சென்று விமலவத்தை வீதிக்கு வலப்பக்கம் திரும்பி, சொல்லப்பட்ட வீதியில் வலப்பக்கத்திலுள்ள விற்பனைக்குரிய இவ்வாதனத்திற்கு அடைவதற்கு ஏறக்குறைய 500 மீற்றர் செல்லவும்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் 02 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு** :- 2016.07.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் அதே திகதிய “டெய்லி நியுஸ் ” , “லக்பிம” மற்றும் “சுடர் ஒளி” ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**:- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) :
(2) உள்ளூர்அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ.கட்டணங்கள்:

(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5%(இரண்டு தசம் ஐந்து வீதம்)
(4) விளம்பரச் செலவுக் கட்டணங்கள்
(5) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தற் கட்டணங்கள்
(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூ.1500 மற்றும் விற்பனை உறப்பட்ட வேறு கட்டணங்கள்

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம் ) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட் டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங் களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல.450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., முகாமையாளர்- அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல.011 4667230

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல.182/3(50/3) , விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொ.பே.: 011 3068185, தொ.நகல்: 011 2572940

8-364

---

## ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. –நகரக் கிளை

முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் ( மேல் மாகாணம் , கொழும்பு மாவட்டம் மற்றும் மாநகர சபை எல்லைக்குள், வட்டார இல. 2, முகத்துவாரம், மாதம்பிட்டியில் அமைந்துள்ளதும் மாதம்பிட்டி வீதி, வரிமதிப்பு இல. 35 ஐக் கொண்டதும், "அம்பகஹகஹாவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். எச். பெர்னாட் ஜோசப் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1999, மே மாதம் 10 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 8/990 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**காணியின் விஸ்தீரணம்( 0ஏ.3 றூ.2.35 பேர்.)**

கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ்.எஸ். ஹல்லோலுவ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2009, மாச்சு 30 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 2413 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள ஈடுவைத்தவரான மெக்வுட்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்டிற்கு அளிக்கப்பட்ட கடன்வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு அடைமானமாகவும் ஈடாகவும் வைக்கப்பட்டுள்ள ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்.**- ஹெட்டியாவத்தையிலிருந்து மட்டக்குளி நோக்கி ஸ்ரீமத் இராமநாதன் மாவத்தை மற்றும் அளுத்மாவத்தை வீதி வழியே மாதம்பிட்டி வீதிவரை சென்று மாதம்பிட்டி வீதி வழியே இடப்பக்கம் திரும்பி , வரிமதிப்பு இல. 35 என அடையாளங் காணப்பட்ட விற்பனைக்குரிய ஆதனத்தை அடைவதற்கு சொல்லப்பட்ட வீதி வழியே ஒரு சில மீற்றர்கள் பயணிக்கவும்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2016, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.**- 2016.06.10 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2016.யூன் 14 ஆந் திகதிய "லக்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) உள்ளூர் அதிகார சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல தரகு விற்பனை விலையின் 2 1/2 % ( நூற்றுக்கு இரண்டரை);
(4) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனைசெலவு மற்றும் வேறேதும் கட்டணங்கள் இருப்பின் ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் இலங்கை அரசினால் அல்லது வேறேதேனும் அதிகார சபையினால் அமுலாக்கப்பட்டு எப்போதும் ஏற்புடைத்தான கட்டணங்கள், வரிகள், வரிக்கட்டணங்கள் அல்லது வேறேதேனும் வரிகள் ஆகியவற்றுடன் சேர்த்து கொள்வனவு விலையின் மிகுதி 90% செலுத்தப்பட வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- "உதவிப் பொது முகாமையாளர் ( அறவீடுகள்), ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க., இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661816, தொலைநகல்: 011-2661835.

டல்லாஸ் கொலாட்ஸ்,
உத்தரவு பெற்ற ஏலதாரர்.

இல. 146/3,
கல்தேரா கார்டின்ஸ்,
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவளை.

தொலைபேசி இல. : 011-4302622, 011-4302623.
தொலைநகல்: 011-2856013

8-362/1

## ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ –நகரக்கிளை

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனைவிலை*

(கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். திருக்கேஸ்வரன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1994, ஏப்பிறல் 11, 1999, திசெம்பர் 10, மற்றும் 1999 திசெம்பர் 10 ஆந் திகதியிடப்பட்ட முறையே ஈட்டு முறி இலக்கங்கள் 584, 2039 மற்றும் 2040 அனைத்தினதும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். கே. ஆர். ரணவக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1989, ஒற்றோபர் 30 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 48 இனதும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஐ. குணசேக்கர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 25 ஒற்றோபர் 1989 மற்றும் 03 செத்தெம்பர் 1990 திகதிகளிடப்பட்ட முறையே ஈட்டு முறி இலக்கங்கள் 872 மற்றும் 1058 இரண்டினதும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு வீ. டபிள்யூ. விஜயதிலக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1987, சனவரி 05, 1987 மாச்சு 05, மற்றும் 1987 திசெம்பர் 18 திகதிகளிடப்பட்ட முறையே ஈட்டு முறி இலக்கங்கள் 593, 601 மற்றும் 626 அனைத்தினதும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி.டீ.எஸ். பீ. லியனகே அவர்களால் 1985, மே 10 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப் படுத்தப்பட்ட ஈட்டு முறி 44 இனது கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஐ.ஏ.ஆர். ரணவக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1982, செத்தெம்பர் 08, 1983 மாச்சு 07 மற்றும் திகதிகளிடப்பட்ட முறையே ஈட்டு முறி இலக்கங்கள் 175 மற்றும் 187 இரண்டினதும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பி.ஈ. புனித ஐ. பெரேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1979 ஏப்பிறல் 10, 1980 நவெம்பர் 05 திகதிகளிடப்பட்ட முறையே ஈட்டு முறி இலக்கங்கள் 1216 மற்றும் 1312 இரண்டினதும் ஆகிய எல்லாவற்றினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள ஈடுவைத்தவரான மெக்வுட்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட்டிற்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு அடைமானமாகவுள்ள ஈடாகவும் வைக்கப்பட்டுள்ள ஆதனம்)

மேலே விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2016, செத்தெம்பர் 09 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வோம்.

CHC-16 தன்னியக்க விசிறிகள் (spray), F-104/kt-17 மின்வலு திருத்தி, உரிஞ்சு குழாய் நொசல்ஸ் சுருள், CH-16 அரை தன்னியக்க விசிறிகள், S H நொசல்ஸ் (2006), D H நொசல்ஸ் (2007), GK-17K மின்வலு திருத்தி, T-S 2A திருத்தி தொகுதி K-Y 13 விசிறி, K. D மாதிரி (9.5 LT) விசிறி, பட்டர்நட் விதை ஆடம்பரம், தக்காளி விதை-கோரல், பெரிய மிளகு விதை- ரெக்லா, கரட் விதை-ஓட், பெரிய மிளகாய் விதை -ஹைவெக்ஸ் விதை -C குளோப், பீட், விதை - டெரொப்ட், பீட் வெங்காய விதை - RB, கோவா விதை, கோவா விதை லோச்நெஸ், போஞ்சி விதை, லோச்நெஸ், போஞ்சி விதை அலை, சிரோவெட் குறைவானவாசமுள்ள வெள்ளை ஸ்பின்ட், கலெகன் பரா தியோகிறெஸ்ல், ISO புறோபைல் அல்ககோல், வடிக்கப்பட்ட நீர், எக்ரோன், சுப்பர் சுபக்டன், நுளம்பு சுருள் (10.5), நொக்ஸ்அவுட் லுபிரினரர், இமுசிபியர், பஸமிட் கிரனுலர், R. P. A. 4, மொனொகுரொம் 60%, மெக்கார்ப் பில்லர்டின், புராடன், பர்பெக்திஸின் 40 EC, டஸ்ட், S p கர்பரைல் 5%, பெக்ரோஸ்பெய்ன் கர்பரைல் 85%, பரகுவாட் மெக்ரிக், M CP A 60, W P M C P A 40, 3, 4, D P A போபாபொன் 85%, NPK உப்பு 20.19.19, NPK திரவம், N P K கிரனியுலர், ரிரையபொன், மென்கோசன் நீலும், மெக்சல் 80 WP பொலிரம், பெவிஸ்ரின், கொடக்ஸ்/கமியுலஸ் 80 WP போன்ற விவசாய இரசாயனங்கள் மற்றும் உபகரணம், HP, லுரெக்ஸோல் கொன்க், இயுலிசின் S சோடியம் ஐதரோசல்பைட், துடிப்பாக்கும் பஸ் விசேட 6, ஒரிக்கல், இயுசிலின் S, சோடியம் ஐதரோசல்பைட், துடிப்பாக்கும் பஸ் விசேட 6, ஒரிசெல் சோடியம் சல்பைட், சோடியம் பை சல்பைட், போர்மிக் அமிலம் (95 கி. கி.), சோடியம் பை சல்பைட் (R, G), போர்மிக் அமிலம் (95 கி. கி.), சோடியம் பை சல்பைட் (R, G), போர்மிக் அமிலம் (95 கி. கி.), சோடியம் பை சல்பைட் (R, G), சோடியம் பை சல்பைட் (R, G), நாகஒக்சைட், கல்சியம் ஸ்ரியரேட், கந்தக தூள் (R.G), A- மெழுகு BASF, பலரல் P50 N, வெலிரெக்ஸ் லீட் இன்ரரொக்ஸ் BP-50-P1, கண்ணாடிநார் கண்ணாடி கடின 450 G, குரோமிரன் FM, டை கல்சியம் பொசுபேட் (FG) சோடா சாம்பல் கோபால்ட் நெப்தெனேட் 6% ரிபக் R830, சிற்றிக் அமிலம் (மொனோஐதரோ அஸ்), ரை சோடியம் சல்பேட், சோடியம் பை காபனேட், பளபளபாக்கும் தூள் (குளோரீன்) பொற்றாசியம் டிசாரோமேட், முகப்பவுடர், போரெக்ஸ் தூள் (தொழில்நுட்ப), போரிக் அமில தூள் (ரெக்), அமில சோடியம் பைரோபொசுபேட் போன்ற கைத்தொழில் இரசாயனங்களின் அடங்கப்பெற்ற பொருட்கள் மற்றும் வர்த்தக வியாபார பயன்களின் கையிருப்புக்கள் முழுவதும் எல்லாமும்.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தினுள், ஜா-எல, ஏக்கல அக்ர ராஜகுர மாவத்தை, வரிமதிப்பு இல. 12 ஐக் கொண்ட வளவுகள் மீதும் இலும் மற்றும் மேற்கூறப்பட்ட மாவட்டத்தில் தற்போதும் எவ்வேளையிலும் காலத்திற்குக் காலம் இதனகத்துப் பின்னர் வியாபாரத்தை நடாத்துகின்ற அல்லது வியாபாரத்தை நடாத்தும் ஏனைய எல்லா வளவுகள், களஞ்சிய அறைகள் மற்றும் நிலக்கீழ் கிடங்குகளின் மீதும் இருக்கின்ற மற்றும் எவ்வேளையிலும் காலத்திற்குக் காலம் இதகனத்துப் பின்னர் பயன்கள், மற்றும் ஏனைய அசையும் ஆதனம் மற்றும் வர்த்தக கையிருப்புக்களை களஞ்சியப்படுத்துகின்ற வியாபாரத்தை கொண்டு நடாத்துகின்ற அல்லது அகற்றுகின்ற மற்றும் இப்பொருட்களின் தொடர் காலப்பகுதியில் காலத்திற்குக் காலம் மற்றும் எவ்வேளையிலும் இதனகத்துப் பின்னர் எவ்வாறு விவரிக்கப்படும் ஒவ்வொன்றாக வகைப்படுத்தப்பட்டும் இருக்கின்ற ஏனைய அசையும் ஆதனங்கள் மற்றும் பலன்கள் மற்றும் கடப்பாடுடையவரின் வர்த்தக கையிருப்புக்கள் இருக்கின்ற அல்லது கொண்டு வரப்படுகின்ற ஏதேனும் இடம் அல்லது எல்லா இடங்களின் மீதும் இலும் இருக்கின்ற (இதனகத்துப் பின்னர் கடப்பாடுடையவரின் எல்லா உபகரணம் மற்றும் கையிருப்புக்கள் என மொத்தமாக குறிப்பிடப்படுகின்ற) விசிறி (Sprayer),

81-A (TS-2) DA விசிறி, சிறிய விசிறி, சிறிய விசிறிக்கான PVC பொட், பொலிஜெட்கள், FO 4/TD40 மின்வலு திருத்தி, CH/ chc-16 உதிரிப்பாகங்கள், KY13 உதிரிப்பாகங்கள், மின்வலு திருத்திகளுக்கான MD-15 உதிரிப்பாகங்கள், புதிய தேங்காய்கள், சுவையூட்டப்பட்ட தேங்காய், கண்ணாடி நார், ஓமெட்கள், மெத்தை போன்ற ஏனைய உற்பத்திகள் மற்றும் கொக்கி இரும்பு, தடுக்கும் சாக்கு துண்டுகள் ஜுட் குவைன் போன்ற மூலப்பொருட்கள் உட்பட ஏனைய இதர உற்பத்திகள், தாள் பைகள், பொலித்தீன் பைகள், பொலிபுறொபலீன் பைகள், சாக்கு பைகள் 50 கி. கி., சாக்கு பைகள்/

ஜுட் பைகள், சாக்கினால் பின்னப்பட்ட பைகள்- பெரிய மற்றும் சிறிய, தேங்காய்களுக்கான சாக்குகள், அலை போன்ற சுருள் பெட்டிகள் போன்ற பொதியிடும் பொருட்கள் உலோக கிளிப்புக்கள், பொலிபுறோபலீன் நாடாக்கள், பொதியிடும், துண்டுகளாக வெட்டும், பளபளபாக்கும் இதர உற்பத்திகள் மற்றும் ஏனைய பொருட்கள், தனித்தனி தளபாடப் பொருத்திகள் மற்றும் எவ்வாறாயினும் விவரிக்கப்படும் ஒவ்வொன்றாக வகைப்படுத்தப்பட்டும் இருக்கின்ற ஏனைய அசையும் ஆதனங்கள் மற்றும் பலன்கள் எல்லாம் சேர்த்து ஏல விற்பனை.

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்**.- ஹெட்டியாவத்தையிலிருந்து மட்டக்குளி நோக்கி ஸ்ரீமத் இராமநாதன் மாவத்தை மற்றும் அளுத்மாவத்தை வீதி வழியே மாதம்பிட்டி வீதிவரை சென்று மாதம்பிட்டி வீதி வழியே இடப்பக்கம் திரும்பி, வரிமதிப்பு இல. 35 என அடையாளங் காணப்பட்ட விற்பனைக்குரிய ஆதனத்தை அடைவதற்கு சொல்லப்பட்ட வீதி வழியே ஒரு சில மீற்றர்கள் பயணிக்கவும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 2016.06.10 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2016, யூன் 14 ஆந் திகதிய ''லக்பிம'', ''டெயிலி மிரர்'' மற்றும் ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) உள்ளூர் அதிகார சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏல தாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனைசெலவு மற்றும் வேறேதும் கட்டணங்கள் இருப்பின் ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டிய இலங்கை அரசினால் அல்லது வேறேதேனும் சபையினால் அமுலாக்கப்பட்டு எப்போதும் ஏற்புடைத்தான கட்டணங்கள், வரிக்கட்டணங்கள் அல்லது வேறேதேனும் வரிகள் ஆகியவற்றுடன் சேர்த்து கொள்வனவு விலையின் மிகுதி 90%.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- ''சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க., இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10'' உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661816, தொலைநகல்: 011-2661835.

டல்லாஸ் கெலாட்ஸ்,
உத்தரவு பெற்ற ஏலதாரர்.

இல. 146/3,
கல்தேரா கார்டின்ஸ்,
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவளை.

தொலைபேசி இல. : 011-4302622, 011-24302623.
தொலைநகல்: 011-2856013

8-362/2